**7. இஸ்ரவேலின் முதல் அரசன் சவுல் எவ்வாறு மரணமடைந்தான்?**

1சாமுவேல் 31:4-5ன்படி, சவுல் தன்னுடைய பட்டயத்தை நிலத்தில் நாட்டி, அதின்மேல் விழுந்து மரித்துள்ளான். ஆனால், 2சாமுவேல் 1:6-10ல் அமலேக்கியன் அவனைக் கொன்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இம்முரண்பாட்டுக்கான காரணம் யாது? **(திருமதி. சி. பாலசிங்கம், லண்டன்).**

ஆரம்பகால வேத ஆராய்ச்சியாளர்கள் இவ்விரு அதிகாரங்களிலும் உள்ள முரண்பாட்டை நீக்குவதற்காக, ஒரு அதிகாரத்தில் குறிப்பிடப்படாத விஷயங்கள் அடுத்த அதிகாரத்தில் எழுதப்பட்டுள்ளது என்று கூறினார்கள். இதன்படி, 1சாமுவேல் 31:4-5ல் குறிப்பிடப்பட்டுள்ளவிதமாக, சவுல் தன்னுடைய பட்டயத்தை நிலத்தில் நாட்டி அதின்மேல் விழுந்துள்ளான். ஆனால், 2சாமுவேல் 1:6-10ல் சொல்லப்பட்ட விதமாக பட்டயத்தின்மீது விழுந்த சவுல் முழுமையாக மரணமடையாமல் இருந்ததினால், யுத்த களத்திற்குச் சென்ற அமலேக்கியன் அவனைக் கொன்றுள்ளான். ஆனால், 1சாமுவேல் 31ம் அதிகாரம் சவுல் உண்மையாகவே மரித்துள்ளதாகவே கூறுகின்றது. மேலும், சவுல் மரித்ததை உறுதிப்படுத்திக்கொண்ட பின்பே அவனுடைய ஆயுததாரி தற்கொலை செய்துகொண்டுள்ளான். எனவே, பாதி உயிருடன் இருந்த சவுலை அமலேக்கியன் கொன்றான் என்று கூறமுடியாது.

உண்மையில், தாவீதிடமிருந்து பரிசுகளைப் பெறலாம் என்னும் நோக்கத்துடனேயே அமலேக்கியன் சவுலைத் தான் கொன்றதாகத் தாவீதிடம் தெரிவித்துள்ளான். நீண்ட காலமாகத் தாவீதைக் கொல்வதற்கு சவுல் முயற்சித்ததினால், தாவீது சவுலைத் தன்னுடைய எதிரியாக நினைத்து அவனுடைய மரணத்தில் சந்தோஷப்படுவான் என்னும் எண்ணத்துடன், ஒரு அமலேக்கியன் சவுலின் ஆபரணங்களைத் தாவீதிடம் கொண்டு வந்தான். இல்லையென்றால், தாவீது அமலேக்கியரை முறியடித்தபின்பு (2சாமு.1:1), தனியாக ஒரு அமலேக்கியன் தைரியத்துடன் தாவீதிடம் வந்திருக்க மாட்டான். மேலும், பிற்காலத்தில் எழுதப்பட்ட நாளாகமப் புத்தகத்தில் 1சாமுவேல் 31ம் அதிகாரச் சம்பவமே சவுலின் மரணத்தைப்பற்றிய விவரணமாகக் குறிப்பிடப்பட்டிருப்பதனால், 2சாமுவேலில் உள்ள கதை, பரிசை எதிர்பார்த்து வந்த அமலேக்கியனுடைய பொய்யாகவே உள்ளது. தாவீதே இதைப்பற்றி 2சாமுவேல் 4:10ல் குறிப்பிட்டுள்ளான்.

© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, November, 2006